NOT FOR SALE


NIRU TUITION CENTRE
KONDAVIL.
A/L 87
Paper Class
Fields and Current Electricity
By Mr. சௌந்தி
B. Sc. (Hons)
Tu - Thu. 6-15 a.m.
89 பௌதிகம்
Tu - Thu, 7-30 a. m.



Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை: ரூ. 1-25



A/L 88
வெப்ப இரசாயனம்
திரு. செல்வா
B. Sc. (Hons)
சனி, ஞாயிறு 8-00 a. m.
NIRU TUITION CENTRE
KONDAVIL.



சுடர் 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ பங்குனி மீ 26 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 09 (09.04 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 114


# இந்தியாவிடம் இலங்கை அரசு கடும் ஆட்சேபம்

## போராளிகளிடம் கைப்பற்றிய ஆயுதங்களை திருப்பிக் கொடுத்தமை நட்புறவுக்கு எதிரான செயலாகும்

கொழும்பு, ஏப்ரல் 9

தமிழகத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் போராளிகள் இயக்கங்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை திரும்பவும் அவர்களிடம் ஒப்படைத்தமை குறித்து இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

இது சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே என் டிக்ஸிற்றைத் தமது அமைச்சுக்கு அழைத்து ஆட்சேபத்தைத் தெரிவித்துக் கொண்டார் என அறியப்படுகிறது.

போராளிகளிடம் ஆயுதங்களைத் திரும்ப ஒப்படைத்தமை இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவுக்கு எதிரான செயல் என்று ஜனாப் ஹமீத் தெரிவித்தாராம்.

தமிழகத்தில் தங்கியிருந்த தமிழீழ விடுதலைப் போராளிகள் இயக்கத் தலைவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதும், அவர்களிடமிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதும், தொலைத் தொடர்புக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டதும் தெரிந்தவையே.

தொலைத் தொடர்புச் சாதனங்கள் இரண்டொரு நாட்களில் திருப்பி ஒப்படைக்கப்பட்டன. கைதான தலைவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட ஆயு

(4ஆம் பக்கம் பார்க்க)

## புனாணையில் சுற்றிவளைப்பு புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 9

மட்டக்களப்பு புனாணைப் பகுதியை நேற்று சுற்றிவளைத்த அதிரடிப் படையினர் பல பொதுமக்களை கைது செய்தனர்.

அப் பகுதியைச் சுற்றிவளைத்த அதிரடிப் படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றி தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட பல பொதுமக்களை விசாரணையின் பின் விடுதலை செய்த அதிரடிப்படையினர் ஒரு சிலரை மட்டும் முகாமுக்கு அழைத்துச் சென்றனர். (உ-10)

## சாம்பல் தீவிலும் சுற்றிவளைப்பு, தேடுதல்

### பல பொதுமக்கள் பலி?

யாழ்ப்பாணம், ஏப். 9

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சாம்பல் தீவுக் கிராமம் நீண்ட கால இடைவெளிக்குப் பின் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை அன்று) சிப்பாய்களினால் சுற்றி வளைக்கப்பட்டது. அங்கு பலத்த தேடுதலும் நடத்தப்பட்டது.

சிப்பாய்களின் சுற்றிவளைப்பில் இருந்து தப்ப முயன்ற பல பொதுமக்களை சிப்பாய்கள் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் இருந்து நண்பகல் வரை இத்தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் சிப்பாய்களினால் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் 30 வயதுக்கு மேற்பட்டோர் உடன் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது. (உ-10)

## இலங்கையில் 'எய்ட்ஸ்' நோயாளி

### பரிசோதனையில் ஊர்ஜிதம்

கொழும்பு, ஏப்ரல் 9

இலங்கையில் முதலாவது 'எய்ட்ஸ்' நோயாளி கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறார்.

இரத்தினபுரியைச் சேர்ந்த 30 வயதான இளைஞர் ஒருவர் இந்த நோய்க்கு இலக்காகி இருக்கிறார் என்பது சோதனைகளின் பின் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இளைஞர் திருமணமாகாதவர். கொள்ளுப்பிட்டியில் இவர் தற்சமயம் வசித்து வந்தார்.

1983 மே மாதத்தில் இருந்து 1984 செப்டம்பர் வரை இவர் லண்டனில் தங்கியிருந்து படித்து வந்தார்.

இருமல், பலவீனம், நெஞ்சுவலி ஆகிய அறிகுறிகள் இவருக்குக் காணப்பட்டன. ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் அவர் சேர்க்கப்பட்டார்.

இவருடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த மூவரில் இருவரை சுகாதார அதிகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கப்பூரில் எய்ட்ஸ் நோயாளி மரணம்

சிங்கப்பூர், ஏப். 8

சிங்கப்பூரின் முதலாவது எய்ட்ஸ் நோயாளி வார இறுதியில் மரணம் அடைந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இறந்த நோயாளியின் சடலம் மிகவும் பாதுகாப்புடன் அடக்கம் செய்யப்பட்டது. (உ-எ)

## கச்சதீவு விவகாரம்; மத்திய, மாநில அரசுகளுக்கு இருவார நோட்டீஸ்!

புதுடில்லி, ஏப். 8

கச்சதீவு விவகாரம் தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் மத்திய அரசும் மாநில அரசும் இந்திய உயர் நீதிமன்றம் முன் ஆஜராக வேண்டும்;

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் திரு. இ. எஸ். வெங்கடராமையா, திரு. கே. என். சிங் விடுத்த நோட்டீஸில் இந்த காலவரையறை விதிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவுக்கு இந்திய பிரஜைகள் சென்று வருவதற்கான பாதுகாப்பு முதலியவற்றை வழங்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தாக்கல் செய்த ரிட் மனு மீதே உயர் நீதிமன்றம் இந்த நோட்டீஸைப் பிறப்பித்துள்ளது. (உ-எ)

## தொண்டர் படை சேவைக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 9

இலங்கை இராணுவத்தின் சிங்க படைப் பிரிவின் 5ஆவது தொண்டர் படை தீவிர சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சிவில் கலவரங்கள் உருவாவதை, அல்லது உருவாகியுள்ள கலவரங்களை அடக்குவதற்காகவே இத் தொண்டர் படை பிரிவு அழைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தான் விடுத்துள்ள ஆணையில் தெரிவித்திருக்கிறார்.

இது சம்பந்தமான ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் ஆணையை நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய் உப சபாநாயகர் சமர்ப்பித்தார்.

## தரையிறங்க எத்தனித்த ஹெலியை விரட்டியடிக்க முயன்ற 3 புலிகள் மரணம்

### கோப்பாய் பாலத்தருகே சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 9

கோப்பாய்ப் பாலத்திற்கு அருகில் தரையிறங்க முயன்ற ஹெலிக்கொப்டர் ஒன்றைத் தரையிறங்க விடாது தாக்குதல் நடத்திய மூன்று போராளிகள் ஹெலித் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் நடைபெற்றது.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று நண்பகல் நாவற்குழிப் பகுதியிலிருந்து கோப்பாய்ப் பக்கமாக மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரை நோக்கி அப்பகுதியில் வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் ஒன்று கடும் தாக்குதலை நிகழ்த்தியது.

இதனால் மோட்டார் சைக்கிளில் வந்தவர் அதனை வீதியில் போட்டுவிட்டு கோப்பாய்ப் பாலத்திற்குக் கீழ் ஒளித்துக் கொண்டார்.

பாலத்தைச் சுற்றியும், மோட்டார் சைக்கிளை நோக்கியும் தொடர்ந்து ஹெலிக்கொப்டர் வேட்டுக்களைத் தீர்த்தது.

பின்னர் ஹெலிக்கொப்டர் அப்பகுதியில் தரையிறங்க முயன்றது.

இதனையடுத்து நாவற்குழிப் பகுதியில் சென்றியில் இருந்த மூன்று போராளிகள் அங்கு விரைந்து ஹெலி மீது பதில் தாக்குதல் தொடர்ந்தனர்.

ஹெலிக்கொப்டர் போராளிகளை நோக்கி கடும் தாக்குதலை நிகழ்த்தியது. போராளிகளும் ஹெலிக்கொப்டரை நோக்கித் திருப்பிச் சுட்டனர்.

ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட குண்டு வீச்சுக்கு இலக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இளநீர் தந்த இளைஞனை சுட்டுக் கொன்றனராம்

### தையிட்டியில் இப்படி ஒரு சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

இளைஞர் ஒருவரிடம் இளநீர் வாங்கிக் குடித்துவிட்டு அந்த இளைஞரையே சுட்டுக் கொன்றனராம் இராணுவப் படையினர்.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஐந்துமணியளவில் காங்கேசன்துறை தையிட்டிப் பகுதியில் இச் சம்பவம் நடைபெற்றது.

செவ்வாய் காலை பலாலியில் இருந்து காங்கேசன்துறைக்கு வந்த சிப்பாய்கள் மாலையில் மீண்டும் பலாலி நோக்கித் திரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



எங்கே ஒரு சாக்குக் கிடைக்கும், இனப்பிரச்சினைப் பேச்சை, அது தான் தீர்வைக் கடத்தலாம் எண்டு அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்குது எண்டது இப்ப விளங்குதெல்லே...!

### சுபநேரம்

09—04—1987
வியாழக்கிழமை

சுபநேரம்:
7-37 முதல் 9-07வரை
ராகுகாலம்:
1-37 முதல் 3-07 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஜோதிடர் சுவாமிகள்

## இயக்க ஐக்கியத்தை வலியுறுத்துகிறார் அமிர்

கொழும்பு, ஏப் 9

போராளிகள் ஐக்கியப்படவேண்டும்; தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஒரு புரிந்துணர்வு நிலைக்கு வரவேண்டும்.

அப்போது தான் கொழும்பு அரசுடனான பேச்சுக்களின் போது நாம் ஒன்றுபட்ட நிலையை முன்வைக்க முடியும்.

கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் முன்கண்டவாறு தெரிவித்தார் என்று ஏ. எவ். பி செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

தமிழ்ப் போராளி அமைப்புக்களுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி இணைந்து கொள்ளப் போவதாகக் கூறப்படுவதை நான் மறுக்கின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரப் பகுதியில் கடற்றொழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

கடற்படையினரின் நடமாட்டத்தினால் குருநகர், பாஷையூர் பகுதிகளில் நூற்றுக்கணக்கான மீனவர் குடும்பங்கள் வறுமையில் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது. கடற்றொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

மண்டைதீவு இராணுவ முகாமை அண்டியுள்ள பகுதிகளில் தற்பொழுது கடற்படையினரின் நடமாட்டம் அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக குருநகர், பாஷையூர் பகுதிகளில் இருந்து ஆழ்கடல்தொழிலுக்குச்செல்லும் ஏராளமான மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சிறிய படகுகளில் கடல் பகுதியில் கிட்டிய தூரங்களுக்குச் சென்று தொழிலில் ஈடுபட்டாலும் அவர்களை நோக்கி கடற்படை படகுகளில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றனவாம்.

கடந்த திங்கட்கிழமை இப் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற பலரது படகு. இயந்திரங்களைச் சிப்பாய்கள் பறித்து கடலினுள் வீசினராம்.

இதன் காரணமாக ஏராளமான படகுகள் கரையில் கட்டிய நிலையில் முடங்கிப்போய்க் கிடக்கின்றன. (உ-10)

## இலங்கையின் பதிலில் புதிய நிபந்தனை?

கொழும்பு, ஏப். 9

பிரதமர் ராஜீவ் காந்திக்கு இலங்கை அரசு அனுப்பிய பதிலில் புதிய நிபந்தனை ஒன்று விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

'டிசம்பர் 19 யோசனைகள்' அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் ஆனால் முன்னர் பேசப்பட்ட விஷயங்கள் பற்றி மீண்டும் பேச்சுக்களை நடத்தக் கூடாது — இதுவே அந்த நிபந்தனை என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன

இந்த நிபந்தனையின் அர்த்தம் என்ன?

கூட்டணியினர் கொழும்பு வந்து அரசுடன் நடத்திய அதிகாரப் பகிர்வு சம்பந்தமான பேச்சுக்களின் காணப்பட்ட முடிவுகள் பற்றி புதிய பேச்சுக்களின் போது பேசக்கூடாது என்று கூறப்படுகிறதா?

அல்லது சிதம்பரம் குழு நடத்திய பேச்சுக்களின்போது காணப்பட்ட இணக்கங்கள் குறித்து மேலும் விரிவாகப் பேசக் கூடாது என்று கூறப்படுகிறதா?

அப்படியானால் டிசம்பர் 19 யோசனையின் அடிப்படையில் பேசப்படப்போகும் விஷயங்களைக் கட்டுப்படுத்தும் முறையில்தான் இந்த நிபந்தனையை இலங்கை அரசு விதித்துள்ளதா?

இக் கேள்விகள்தான் அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளன. (இ-ஏ)

## தமிழ் அகதிகளை கொழும்புக்கு அனுப்ப பிரிட்டன் மறுப்பு

கொழும்பு, ஏப். 9

லண்டன் தமிழ் அகதிகளை அடையாளம் காட்டுவதற்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கும்படி இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை பிரிட்டிஷ் அதிகாரிகள் புறக்கணித்து விட்டனர்.

இதன் காரணமாக மீண்டும் இலங்கை தனது கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது.

"பிரிட்டிஷ் அரசு தனது பாதுகாப்பு அதிகாரிகளுடன் தமிழ் அகதிகளை கொழும்புக்கு அனுப்பி வைக்க வேண்டும், அப்போது வேறு அகதிகளை அடையாளம் காட்ட முடியும்"— இப்படி வெகுஜன தொடர்பு நிலையம் இரண்டாவது தடவையாக பிரிட்டனுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-எ)

## இராணுவப் பயிற்சிக்கு மறுப்பு: ரயில்வே பாதுகாப்பு பிரிவு கலைக்கப்பட்டது

கொழும்பு, ஏப். 9

இராணுவப் பயிற்சி பெற மறுத்த ஊழியர்களைக் கொண்ட ரயில்வே பாதுகாப்புப் பிரிவு கலைக்கப்பட்டுவிட்டது.

இராணுவப் பயிற்சி பெறவேண்டும் என்ற நிபந்தனையை ஊழியர்கள் ஏற்றுக்கொள்ள அவர்களைக் கட்டாயப் படுத்தும் வகையில் புதிய ரயில்வே பாதுகாப்புப் பிரிவு ஒன்று தற்போது

(4ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### வல்வை இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 9

கடந்த ஐந்தாம் திகதி வல்வெட்டித்துறையில் அரச படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்கான எஸ் இராஜரட்ணம் என்ற இளைஞர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இவரது மரண விசாரணையை யாழ் பதில் நீதிவான் திரு. ஏ. அன்ரனி நடத்தினார். (உ-10)

### தென்னை தறித்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 9

பதுங்கு குழி அமைப்பதற்கு தென்னை மரம் தறித்தவர் மீது தென்னை வட்டு விழுந்ததனால் அவர் மரணமானார்.

செவ்வாய்க்கிழமை ஆனைப்பந்தியில் உள்ள ஒருவரது வீட்டிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றது.

மரணமானவர் செல்வராசா (வயது 25). இவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவதற்காக யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது (உ-10)

### கோட்டை வேட்டினால் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து தீர்க்கப்பட்ட சினைப்பர் முறை துப்பாக்கி வேட்டினால் நேற்றும் ஒரு இளைஞர் காயமடைந்தார்.

பாங்ஷால் வீதியில் நின்ற இளைஞர் ஒருவரே நேற்று காலில் காயமடைந்தார்

கோட்டை முகாமிலிருந்து அடிக்கடி சினைப்பர் வேட்டுக்கள் தீர்க்கப்படுவதும் அதனால் பொதுமக்கள் காயமடைவதும் தற்போது வழக்கமாகிவருகிறது. (உ-10)

### சிப்பாய்கள் நடமாட்டம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

மண்டைதீவு இராணுவ முகாமை அண்டியுள்ள சிறுத்தீவு என்னும் இடத்தில் சிப்பாய்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதேவேளை இப்பகுதியில் மேலும் ஒரு மினி முகாம் அமையலாம் என பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

மண்டைதீவு முகாமை அண்டிய கடல் பகுதியில் கடற்படைக் கப்பல்களும், பீரங்கிப் படகுகளும் தினமும் ரோந்து சுற்றி வருகின்றன.

இவை கரையோரப் பகுதியில் இருந்து தாக்கப்படலாம் என அஞ்சியே சிப்பாய்கள் மண்டைதீவை அண்டி உள்ள சிறுதீவுகளில் பகலில் வந்து தங்கி நடமாடுகின்றனர்.

நேற்றும் பல பீரங்கிப் படகுகள் மண்டைதீவு கடல் பகுதியில் காணப்பட்டன. (இ-10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★ இன்னறு சிறு விளம்பரங்கள் ★

### தவறிவிட்டது

சென்ற சனிக்கிழமை மாலை 4-30 மணியளவில் மானிப்பாய் வீதியில் தவறிய அல்பத்தை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க. லோகராசா, உதயன் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (2819)

# இரவு நேரங்களில் வீடுகளில் தங்க அச்சம்

## வயாவிளான், ஒட்டகப்புலம் மக்கள் தினமும் அச்சுவேலி வந்து செல்கின்றனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

வயாவிளான், ஒட்டகப்புலம் பகுதி மக்கள் இரவு உணவுகளுடன் தினமும் மாலைவேளைகளில் அச்சுவேலிப் பகுதியை நோக்கிச் செல்வதைக் காணமுடிகிறது.

இரவு வேளைகளில் திடீர் திடீரென பலாலி முகாமிலிருந்து வயாவிளான், ஒட்டகப்புலம் பகுதியை நோக்கி ஏவப்படும் ஷெல் குண்டுகளே இதற்குக் காரணம்.

ஏற்கனவே பல குடும்பங்கள் இராணுவ அச்சுறுத்தலால் இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியமர்ந்துள்ளன.

பல குடும்பங்கள் வறுமை நிலை, பயிர்ச் செய்கை, தொழில்கள் காரணமாக தமது இல்லிடங்களை விட்டு இடம்பெயர முடியாத நிலையில் உள்ளன.

இவர்களே தினமும் மாலையில் உணவுடன் அச்சுவேலிப் பகுதிக்கு இடம்பெயர்ந்து, காலையில் மீண்டும் தமது வீடுகளுக்கு செல்கின்றனர். (இ-எ)

### மண்டைதீவில் மீனுக்கு தட்டுப்பாடு

மண்டைதீவு ஏப்ரல் 9

மண்டைதீவு பகுதியில் மீனுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடல் வலயச் சட்டத்தால் இப்பகுதி மீனவர்கள் தொழிலுக்கு போகாததே இத்தட்டுப்பாட்டுக்குக் காரணம். (இ-88)

## சுரண்டல் டிக்கெட் கொடுத்த "பரிசு"

கொழும்பு, ஏப். 9

சுரண்டல் டிக்கெட்டில் முழுப் பணத்தையும் செலவழித்து தோல்வி கண்டவர், ஊர்காவல் படையில் பணிபுரியும் மாமனாரின் துப்பாக்கியை வாங்கி தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் அண்மையில் வவுனியாவில் இடம் பெற்றது.

இறந்தவரின் பெயர் முதலிஹாமி வவுனியா நகருக்குச் சென்று சுரண்டல் டிக்கெட் வாங்கி அதிர்ஷ்டம் பார்த்தார் முந்நூறு ரூபாவுக்கு சுரண்டல் டிக்கெட் வாங்கியும் அதிர்ஷ்டம் கிடைக்கவில்லை.

பின்னர் தனது சைக்கிளை அடகு வைத்து முந்நூறு ரூபா பணத்தைப் பெற்றார். அந்தப் பணத்துக்கும் சுரண்டல் டிக்கெட் வாங்கிப் பார்த்தார் அப்பொழுதும் அதிர்ஷ்டம் அடிக்கவில்லை.

பின்னர் ஊர்காவல் படையில் பணிபுரியும் மாமனாரின் வீட்டுக்குச் சென்றார்.

மாமனாரின் துப்பாக்கியை எடுத்து தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். (இ-ஐ-எ)

## விளையாட்டரங்கு

### ஏழாலை முத்தமிழ் மன்றம் சம்பியன்

சுன்னாகம், ஏப்ரல் 9

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுச் சங்கங்களுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் இறுதிப் போட்டியில் ஏழாலை முத்தமிழ் மன்றம் சம்பியனாகியது.

சுன்னாகம் சிங்கமாப் பாணர் விளையாட்டரங்கில் போட்டி நடைபெற்றது.

போட்டி ஆரம்பமாகி 10 நிமிடங்களில் முத்தமிழ் மன்ற முன்னணி வீரன் சகாதேவன் முதலாவது கோலைப் போட்டார்.

இடைவேளையின் பின் வளர்பிறை விளையாட்டுக் கழக வீரன் வசந்தச்சந்திரன் ஒரு கோலைப் போட்டார்.

விளையாட்டு முடியும் நிலையிலும் வேறு கோல் எதுவுமடிக்கப்படவில்லை. ஆகையால் வெற்றியை நிர்ணயிப்பதற்காக மேலும் ஐந்து நிமிடம் கொடுக்கப்பட்டது. அப்படி இருந்தும் எந்தக்கழகமும் கோல்போட முடியாதவாறு போட்டி மும்முரமாக இருந்தது.

இதனால் இரு கழகங்களுக்கும் தலா 5 பெனல்டிகள் வழங்கப்பட்டன.

இச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திய முத்தமிழ் மன்றம் 3 கோல்களைப் போட்டது. வளர்பிறை ஒரு கோலை மட்டும் போட்டது.

எனவே 4 : 2 கோல்களால் ஏழாலை முத்தமிழ் மன்றம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

சிறந்த கோல்காப்பாளராக வளர்பிறை வீரர் டைனியாவும், முத்தமிழ் வீரர் கைலாசபதியும் தெரிவாகினர். (இ-87)

## விதவைகளுக்கு மறுமணம் செய்துவைத்து வாழ்வு அளிக்குக

### மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்திடம் கோரிக்கை

இளம் வயதில் கணவரை இழந்த விதவைகளான பெண்களுக்கு மறுமணம் செய்து வைத்து புனர்வாழ்வு வழங்குவதிலும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் ஈடுபடவேண்டும்.

மன்னார் அரச அதிபர் ஜனாப் எம். எம் மக்பூல் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

சங்கம் நடத்திய கலந்துரையாடலில் பங்குபற்றி பேசுகையில் அரச அதிபர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சங்கத் தலைவர் வணபிதா சேவியர் குருஸ் தலைமை வகித்தார்.

அரச அதிபர் ஜனாப் மக்பூல் மேலும் பேசுகையில், மன்னார் மாவட்டத்தில் கண்ணீருடன் வாழ்க்கையை நடத்தி வரும் விதவைகளுக்கு ஆறுதலும் தேறுதலும் கூறும் சங்கத்தின் நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன்.

இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் சகல திட்டங்களுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டும் என்று சகல உதவி அரச அதிபர்களையும் கிராம சேவையாளர்களையும் கேட்டுக் கொள்ளுகின்றேன்"— என்று சொன்னார்.

பொதுச் செயலாளர் திரு. சின்னவேயர் பீற்றர் பேசுகையில், சங்கத்தின் பணிகள் பற்றி எடுத்துச் சொன்னார். சங்க உபசெயலாளர் திரு பி கே செல்வராஜ் பேசுகையில், 'விதவைகள் புனர்வாழ்வு சம்பந்தமாக பல சுயவேலை வாய்ப்பு முயற்சிகளை திட்டமிடல் இலாகா மூலம் சங்கம் திரட்டியுள்ளது. அவற்றை அமுல் நடத்துவதற்கு முன்னர் விதவைகளின் விருப்பத்தை அறியவேண்டியுள்ளது. அதற்கான கேள்விக் கொத்து சகலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது'— என்று சொன்னார்.

விதவைகள் மறுமணம் பற்றிப் பேசுகையில், "இளம் விதவைகள் மறுமணம் புரிய இருப்பின் அவர்கள் தங்கள் பெற்றோர் மூலம் சங்கத்துடன் தொடர்புகொள்ள வேண்டும்.

யாழ் ஆதிகள் புனர்வாழ்வுக் கழகம், சிறுவர் பராமரிப்பு நிலையம், போன்றவற்றின் உதவியுடன் விதவைகளுக்கு மாதாந்தம் அலவன்ஸ் வழங்குவது சம்பந்தமாகவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

விரைவில் இவை அறிமுகம் செய்து வைக்கப்படும்"—என்று பொதுச் செயலாளர் திரு. சின்னவேயர் பீற்றர் தெரிவித்தார். (இ-எ)

## தபாலக ஊழியருக்கு கடமை, கண்ணியம் அவசியம்

அம்பாறை. ஏப் 9

தபாலக ஊழியர்கள் கடமை, கண்ணியம் மிக்கவர்களாகத் திகழ வேண்டும்.

கல்முனை பிரதம தபாலதிபராகக் கடமையாற்றி, யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு எஸ் பராஜசிங்கம், கல்முனை பிரதம தபாலகத்தில் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்திற்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை தபாலக சிரேஷ்ட மேற்பார்வை உத்தியோகத்தர் திரு. பீ எல். அப்பிரல் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

கல்முனை புதிய தபாலதிபர் திரு. கே. ரீ பாலேந்திரன் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

தபாலதிபர் திரு பராஜசிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்; 'இன்று தபாலக சேவை மக்களுக்கு மிகவும் அவசியமானதாக அமைந்துள்ளது.

எனவே இந்த சேவையில் கடமையாற்றும் நாம் கடமையில் அசமந்தமாக இருக்கக் கூடாது.

மக்களுக்கு எந்தெந்த வழிகளில் திருப்திகரமாகவும், சுலபமாகவும் கருமங்களை ஆற்றமுடியுமோ அந்த வழிகளில் நாம் உண்மையான சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற வேண்டும், என்றார். (இ-14)

## மக்கள் முகம்

### ஓய்வு பெற்றார்

மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையில் உப அதிபராக கடந்த ஏழு ஆண்டுகள் அரும்பணியாற்றிய திருமதி தர்மதேவி மகாதேவன் தனது 20 வருட



ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

கடமை உணர்வும், சாந்தமும் பொறுமையும் நிறைந்த இவர், கல்வியுலகைப் பொறுத்தவரையில் ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாகவே திகழ்ந்தார்.

தாய்மையின் பரிவும் நல்லாசானின் சான்றாண்மையும் நிறைந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியற் சிறப்புப் பட்டதாரியும் கல்வி டிப்ளோமாப் பட்டதாரியுமாவர்.

சங்குவேலி மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அட்டன் புனித கபிரியேல் மகளிர் வித்தியாலய பழைய மாணவியும் மாத்தளை பாக்கிய வித்தியாசாலையின் முன்னாள் ஆசிரியையுமாவார்.

குறிப்பாக மெமோரியல் ஆங்கில பாடசாலையின் இன்றைய வளர்ச்சியில் பெரும்பங்கு செலுத்தியவர். இவரது இழப்பு பாடசாலை மாணவ சமுதாயத்திற்குப் பேரிழப்பாகும். (இ)

### மகளைக் கொன்றாராம் தந்தை

கொழும்பு, ஏப்ரல் 9

மகளைச் சுட்டுக் கொலை செய்தார் தந்தை.

தந்தை ஊர்காவல் படையைச் சேர்ந்தவர் 16 வயதுமகளானவர் மாற்று இன இளைஞனைக் காதலித்து வந்ததை தந்தை அறிந்தார்

துப்பாக்கியை எடுத்து மகளைச் சுட்டுக் கொன்றாராம்.

இச் சம்பவம் கல்குடா, வல்லகுண்டி கிராமத்தில் இடம்பெற்றது.

தந்தையான ஊர்காவல் படையைச் சேர்ந்தவர் கல்குடா பொலீஸாரால் கைது செய்யப்பட்டார், தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்- (இ-ஐ-எ)

### பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

மானிப்பாய் வட்டாரம்

ஆண்கள்

13 வயதுப் பிரிவு:-
சின்மய பாரதி வித்தியாலயம் முதலாமிடம், மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை இரண்டாமிடம், புனித ஆன் றோ. க.த. பாடசாலை மூன்றாமிடம்.

17 வயதுப் பிரிவு:-
சின்மய பாரதி வித்தியாலயம் முதலாமிடம், மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை இரண்டாமிடம், ஆனைக்கோட்டை றோ. க.த. பாடசாலை மூன்றாமிடம்.

19 வயதுப் பிரிவு:-
மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை முதலாமிடம், இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலயம் இரண்டாமிடம், ஸ்ரீ சந்தவரோதயாக் கல்லூரி மூன்றாமிடம்.

பெண்கள்

13 வயதுப் பிரிவு:-
உடுவில் மகளிர் கல்லூரி முதலாமிடம், சின்மய பாரதி வித்தியாலயம் இரண்டாமிடம், புனித ஆன் றோ. க. த. பாடசாலை மூன்றாமிடம்.

17 வயதுப் பிரிவு:-
உடுவில் மகளிர் கல்லூரி முதலாமிடம், மானிப்பாய் மகளிர் கல்லூரி இரண்டாமிடம், இராமநாதன் கல்லூரி மூன்றாமிடம்.

19 வயதுப் பிரிவு:-
மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலாமிடம், இராமநாதன் கல்லூரி இரண்டாமிடம், இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம் மூன்றாமிடம்,

நெல்லியடி கொத்தணி

ஆண்கள்

13 வயதுப் பிரிவு:-
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் முதலாமிடம் ஞானசிரியர் கல்லூரி இரண்டாமிடம் தேவரையாளி இந்துக் கல்லூரி மூன்றாமிடம்.

17 வயதுப் பிரிவு:-
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் முதலாமிடம், ஞானசிரியர் கல்லூரி இரண்டாமிடம், தேவரையாளி இந்துக் கல்லூரி மூன்றாமிடம்.

பெண்கள்

13 வயதுப் பிரிவு:-
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் முதலாமிடம்.

17 வயதுப் பிரிவு:-
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் முதலாமிடம், ஞானசிரியர் கல்லூரி இரண்டாமிடம் தேவரையாளி இந்துக்கல்லூரி மூன்றாமிடம். (இ-7)

(தொடரும்)

## விளையாட்டு போட்டிகள் மூலம் சகிப்புத் தன்மையை மாணவர்கள் கற்கிறார்கள்

சுன்னாகம், ஏப். 9

நல்ல பிரஜைகளை நாம் உருவாக்க விரும்பினால் நல்ல ஆசிரியர்களையும் பாடசாலைகளையும் உருவாக்குதல் அவசியம். பாடசாலைகளில் மாணவர்கள் கல்வியை மாத்திரம் கற்பதில்லை நற்பழக்க வழக்கங்களையும்- விளையாட்டு போட்டிகள் மூலம் சகிப்புத் தன்மையையும் கற்கிறார்கள்;

யாழ் கல்வி திணைக்களத்தின் கணக்காளர் திரு. வி. யோசப் மேற்கண்டவாறு கூறினார்

சுன்னாகம் றோமன் க. த. க. பாடசாலையில் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி அவர் உரையாற்றினார்.

இப்போட்டிக்கு பாடசாலை அதிபர் திரு. அ. யு. வைநாயகம் தலைமை வகித்தார்.

வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதவான் திரு. பூ. சதாசிவரத்தினம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றினார்.

விளையாட்டுப்போட்டியில் சிறப்பு அம்சமான கல்லூரியின் பழைய மாணவர்களான திருமணமானோருக்கும் திருமணமாகாதோருக்குமிடையே நடைபெற்ற கயிறிழுத்தல் போட்டியில் திருமணமானோர் வெற்றி பெற்றனர், (இ-27)


## பிரயாண ஒழுங்குகள் குவைத்

பின்வருபவர்களுக்கு பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும்.

- ★ தொழிலாளர்: (Labour)
- ★ தச்சுவேலை (Carpenter)
- ★ மேசன் (Mason)
- ★ கனரகவாகன சாரதி (H. E. Operator H. D. Driver)

பாஸ்போர்ட் 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்

கொழும்பு முகவரி:

Construction & Development Ltd.
37, Jeyasingha Mawatthe,
NUGEGODA.

V. P. பாலா
C/o N. V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு
கோண்டாவில். (1778)


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### றெட்பாணா இலவச மருந்து விநியோகம்

முள்ளியவளை, ஏப்ரல் 9

திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து முள்ளியவளை முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு உதவும் பொருட்டு றெட்பாணா ஸ்தாபனம் இலவசமாக மருந்து வகைகளை வழங்கி உள்ளது

புனர்வாழ்வு அமைச்சின் உதவியுடன் ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி ஒருவரும் அகதிகளுக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்

இவ்வைத்திய அதிகாரி வாரத்தில் முழு நாளும் அகதிகளுக்காகக் கடமை ஆற்றுவார். (இ-93)

### செல்வாபற்றி ஜனார்த்தனன்

இலங்கைத் தமிழரின் இன்றைய நெருக்கடி காலத்தில் தந்தை செல்வநாயகம் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் அளித்த முக்கியத்துவத்தை நாம் நினைவுகூரவேண்டும்.

இப்படி உலகத்தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

தந்தை செல்வநாயகத்தின் 91 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி இந்த அறிக்கையை டாக்டர் ஜனார்த்தனன் வெளியிட்டார் (இ-எ)

## அரசபண்ணையிலிருந்து கோழிக்குஞ்சுகள் தருவிக்கப்பட்டு விநியோகம்

மானிப்பாய், ஏப் 9

இம்மாதம் மூன்றாம் வாரத்தில் இருந்து அரசாங்க பண்ணைகளில் இருந்து கோழிக் குஞ்சுகள் தருவிக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படும். தாரா இறைச்சி இனக் கோழிகள் ஆகியவற்றையும் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் சுன்னாகம் கிளைத் தலைவர் திரு. எம். சுதர்சன் இதனைத் தெரிவித்தார்.

கால்நடை வளர்ப்போர் சங்க சுன்னாகம் கிளையின் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்,

இக்கிளையின் மூலம் கோழிகளுக்கான இலவச நோய்த் தடுப்பூசிகளும் அளிக்கப்பட உள்ளன.

மாட்டின் போசணைத் தரத்தை உயர்த்துவதற்காக வைக்கோலுக்கு யூரியா பிரயோகம் செய்யும் முறை பற்றி விவசாயிகளுக்கும் கால்நடைவளர்ப்போருக்கும் செயல் முறை மூலம் விளக்கம் அளிக்கப்படும்.

இன விருத்திக்காக இப்பகுதியில் ஓர் நல்ல இன ஆட்டுக் கடா வளர்த்தல்—

நல்லின பசுக் கன்றுகளை வளர்த்தல்- அயற்றைக் குறைந்த விலையில் மக்களுக்கு விநியோகித்தல்.

செயற்கை முறையான சினைப்படுத்தலை விஸ்தரித்தல்-

கால்நடை வைத்தியரின் சேவைகளை மக்களுக்கு சிறந்த முறையில் பெற்றுக் கொடுத்தல்

இவைபோன்ற செயற்பாடுகளை நடைமுறைப் படுத்தப் போவதாகவும் திரு எம். சுதர்சன்

## இக்கட்டான நிலையிலும் விளையாட்டில் பங்குபற்றும் வீரர்

### கிளிநொச்சி அரச அதிபர் பாராட்டு

கிளிநொச்சி, ஏப். 9

ஒரு பக்கம் பிணக்குவியல் மறுபக்கம் மரண ஓலம். இவை எல்லாம் வாழ்வின் மத்தியில் சாவு சாவின் மத்தியில் வாழ்வு என்பதனையே எடுத்துக் காட்டுகின்றன இந்தச் சூழ்நிலையிலும் வீர, வீராங்கனைகள் விளையாட்டில் கலந்து கொள்கிறார்கள். இவர்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு மல்லாவி, போட்டியில் பிரதம

மாவட்டச் செயலாளரும் அரச அதிபருமான திரு. கே. தேவசிகாமணி மேற்கண்டவாறு கூறினார்

கிளிநொச்சி இந்து மகாவித்தியாலய விளையாட்டரங்கில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு கே. குணராசா தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன

அரசாங்க அதிபர் ... மாணவர்களுக்கு வெற்றி தோல்வி அல்ல முக்கி

ஆக அவர்களின் மனம் பக்குவம் அடைய வேண்டும் என்றார்.

தலைவர் தமது தலைமையுரையில் இக்கட்டான சூழ்நிலையில் இத்தகைய விளையாட்டுப் போட்டி நடைபெறுவது வீர வீராங்கனைகளின் தன்நம்பிக்கையையே காட்டுகிறது. கிளிநொச்சி மாவட்டம் விளையாட்டில் மட்டுமல்ல கல்வித் ... மாணவர்களையும் உருவாக்கியுள்ளது என்

## கடமையைச் சரியாக செய்வதில் பின்நிற்பதில்லை

### பிரியாவிடை வைபவத்தில் உரை

மண்டைதீவு, ஏப் 9

கடமையைச் சரியாகச் செய்வதில் திரு. மாசிலாமணி என்றுமே பின்நின்றதில்லை. அவரைப் பின்பற்றி ஏனைய ஊழியர்களும் நடக்க வேண்டும்.

யாழ். மா. அ. மண்டைதீவு உப அலுவலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு. மாசிலாமணியின் பிரியாவிடை வைபவம் அண்மையில் நடைபெற்றது.

தலைமை வகித்துப் பேசிய நிர்வாக அதிகாரி திரு. டி. பூபாலசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

உப அலுவலக மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் 36 வருடங்கள் தனது கடமையை நேர்மையாகச் செய்து உயர் அதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றவர் திரு. மாசிலாமணி என்றார்.

மண்டைதீவு கிழக்கு கி. அ. சங்கத்தின் தலைவர் அ. ஜெபகுணசிலகம், மா. அ. சங்கத் தலைவி ஞானமணி நடராசா விசேஷ சேவை உத்தியோகத்தர் சிவகுலசிங்கம் உட்படப்பலர் பேசினர். (இ-88)


## விற்பனை

மானிப்பாய்க்கும் சண்டிலிப்பாய்க்குமிடையில், நல்ல சுற்றுடலில் 8 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்.

என். ஜெயரஞ்சிதன்
ஷப்ரு யுனிக்கோ பிளான் லிமிடட்
(8827) யாழ்ப்பாணம்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

மனித உறவுகள் தர்ம வழியில் அமைய வேண்டும்; இல்லையேல் மனித இனத்தைத் துன்பம் சூழ்ந்து கொள்ளும்.

— பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா

உதயன்

இல, 16, கஸ்தூரியார் வீதி (?) தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 09-04-1987

## பல்கலைக்கழகக் கல்லூரிகள்

வடபகுதியில் பல்கலைக்கழகக் கல்லூரிகள் நிறுவப்படவேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ப. சந்திரசேகரம் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

நீண்ட கால முயற்சிக்குப் பின்னரே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கையில், மட்டக்களப்பில் முழு அந்தஸ்துள்ள பல்கலைக்கழகம் இந்த வருடம் தான் உருவாக்கப்பட்டது.

தமிழ்ப் பகுதி மாணவர்களின் உயர் கல்வித் தேவையை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு இரண்டு பல்கலைக்கழகங்களும் இன்னும் இல்லை. கட்டட வசதி, உபகரண வசதி, விரிவுரையாளர் வசதி என்பன அவற்றுக்குப் போதாது.

அதனால் உயர்கல்வி பெறுவதற்குத் தகுதி இருந்தும் பல தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வி பெறும் வாய்ப்பை இழந்து விடுகிறார்கள். இது பெரும் அநியாயமாகும். அந்த மாணவர்களின் கல்வி (மனித) உரிமைகள் மறுக்கப்படுவதும் ஆகும். அவை மட்டுமா? எதிர்காலச் சமுதாயத்தின் கல்வி வளர்ச்சிக்கு இடப்படும் தடையாகவும் இது உள்ளது.

பொதுவாகப் பார்க்குமிடத்து, பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிப்பதற்குத் தகுதியுடைய தமிழ் மாணவர்களில் சுமார் 80 சதவீதமானோருக்கு அந்த வாய்ப்பு இல்லாமற் போகிறது. வருடாந்தம் இது தொடருமானால் எமது மாணவரின் உயர்கல்வி நிலை என்ன வாகும்? ஒருசிலர் மட்டுமே பல்கலைக்கழகக் கல்வி பெற்றவர்களாக இருக்கும் எதிர்காலச் சமுதாயம் ஒன்று உருவாகும். அதன் விளைவாக முன்னேறி வரும் உலகத்தில் ஈழத்தமிழர் சமுதாயம் கல்வித் துறையில் பின்தங்க நேரிடும்.

இது தடுக்கப்பட வேண்டும்; தவிர்க்கப்படவேண்டும். அதிக எண்ணிக்கையான மாணவர் பல்கலைக்கழகக் கல்வி வசதி பெறச் செய்வதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

வடக்கு - கிழக்கில் பிரதான நகரங்களில் பல்கலைக்கழக வளாகங்கள் ஸ்தாபிக்கப்படுதல் அவற்றில் ஒன்றாகும். அந்த வளாகங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அல்லது மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்படக்கூடியனவாக உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறு ஸ்தாபிக்கப்படும் பல்கலைக்கழக வளாகங்களில் பொதுக் கல்வியுடன் அந்தப் பிரதேசத்தின் மூலவள, இயற்கை வளங்களைப் பொறுத்து ஒவ்வொரு துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் உயர்கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக இருந்து பயன் இல்லை. கலை, விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் என்ற துறைகளில் மட்டும் பட்டதாரிகளைப் பெருக்கும் பல்கலைக்கழகக் கல்விமுறை மாற்றி அமைக்கப்படவேண்டும்.

எமது பிரதேசங்களை நாமே வளர்த்து வளமடையச் செய்ய வேண்டுமெனில் பல்கலைக்கழகக் கல்வி தொழில், தொழில் நுட்பம் சார்ந்த தன்மையினதாக இருப்பது அவசியம்.

பிரதான நகரங்களில், பிரதேசங்களில் பல்கலைக்கழகக் கல்லூரிகளை நிறுவுவதன் மூலமும் உயர்கல்வி வசதியைப் பெருக்கலாம்.

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கல்லூரிகளில் பயின்று பட்டதாரிகளாக வரும் வாய்ப்பு மாணவருக்கு உண்டு. பல்கலைக்கழகத்தில் இடவசதி இல்லை என்பதால் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புத் தடுக்கப்படும் பொருத்தமற்ற முறை அதன்மூலம் இல்லாமற்போகும். உயர்கல்வி பெறத் தகுதியுள்ளவர்கள் தமது திறமையைப் பயன்படுத்தி எங்கு பயின்றும் கல்வித்துறையில் முன்னேறலாம்.

பல்கலைக்கழக வளாகங்களை உடனடியாக நிறுவுவது சிரமமாக இருக்கும் பட்சத்தில் வடக்கு, கிழக்கின் முக்கிய நகரங்களில், பிரதேசங்களில் பல்கலைக்கழகக் கல்லூரிகளையாவது ஆரம்பிப்பது பொருத்தமாக இருக்கும்.

அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் தரமான கட்டட வசதியுள்ள பாடசாலைகளைத் தெரிவு செய்து, அவற்றை பல்கலைக்கழகக் கல்லூரிகளாக மாற்றலாம். கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, கல்முனை ஆகிய இடங்களில் பல்கலைக்கழகக் கல்லூரிகளை உடனடியாக நிறுவலாம்.

ஆனால் தென்னிலங்கை அரசு இவற்றைச் செய்யும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. எமக்கெனச் சுயாட்சி கிடைத்தால் மட்டுமே பல்கலைக்கழகக் கல்லூரிகளையோ அல்லது வளாகங்களையோ நிறுவுவது சாத்தியமாகும். எமது பொருளாதார கலாசார, பண்பாடுகளை வளர்க்க வல்ல உயர்கல்வி நிலையங்களை உருவாக்க முடியும்.

# ஈரானுக்கு ஆயுதங்கள் பாகிஸ்தான் ஊடாகவாம்

## செக். ஜனாதிபதி குற்றச்சாட்டு

பிராக், ஏப்ரல் 8

ஈரானுக்கான ஆயுதங்கள் பலவற்றை கடந்த மாதம் பாகிஸ்தான் ஊடாக அமெரிக்கா அனுப்பிவைத்தது. சிமிங்ஸ்டன் ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு பாகிஸ்தானின் இச்செயல் அவசியமானதாக இருந்தது.

இவ்வாறு செக்கோஸ்லாவியா ஜனாதிபதி பத்திரிகைப் பேட்டி ஒன்றில் குற்றம்சாட்டினார்.

ஆனால் பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சகம் இதனை முற்றாக நிராகரித்தது.

பாகிஸ்தான் தீவிரமாக நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது என்றுகூட போராத் தூண்டிவிடும் யோசனை அதற்கு அறவே இல்லையாது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஈரானுக்கோ அல்லது ஈராக்கிற்கோ ஆயுதம் வழங்கும் பணியில் பாகிஸ்தான் ஈடுபடவில்லை.

இவ்வாறு வெளியுறவு அமைச்சரகம் வெளியிட்ட மறுப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுத உற்பத்திகள் பாகிஸ்தானில் மேற்கொள்ளப்படுவது போரி நடவடிக்கைகளுக்காக அல்ல என்பதை ஆதாரபூர்வமாக நிரூபித்ததன் பின்னரே சிமிங்ஸ்டன் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டு 400 கோடி டாலர் கடனை வழங்க அமெரிக்கா முன்வந்ததாகவும் அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. (ஓ)

### ரஷ்யா

## ஆதிக்கப் போக்கை கைவிட வேண்டும் என்கிறார் றேகன்

வாஷிங்டன், ஏப் 8

சோவியத் யூனியன் உறவுகளை அருந்தி செய்து கொள்வதில் விசுவாசமாக இருக்குமாயின் உலக நாடுகளில் அதன் ஆதிக்கப் போக்கினை கைவிட வேண்டும்.

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி றேகன் தெரிவித்தார்.

சோவியத் தலைவர் மிக்கையில் கோர்பச்சேவ் சமுதாயத்தில் புகுத்தியுள்ள சீர்திருத்தங்கள் வரவேற்கப்பட வேண்டியவை. ஐரோப்பிய நாடுகளிலிருந்து நடுத்தர வீச்சு ஏவுகணைகளை அகற்றுவதற்கு தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

**வெளி உலகில்**

## பஸ்ராவில் மீண்டும் போர் ஆரம்பம்

தெஹ்ரான், ஏப்ரல் 8

ஈராக்கின் துறைமுக நகரான பஸ்ராவில் மீண்டும் பலத்த சண்டை ஆரம்பமாகியுள்ளது.

ஈரான் மேற் கொண்ட பீரங்கித் தாக்குதல்களில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான ஈராக்கிய சிப்பாய்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என தெஹ்ரான் வானொலி அறிவித்தது.

எண்ணெய் நிலையங்கள் மீது ஈராக் நடத்திய தாக்குதலுக்கு இது ஒரு பதில் நடவடிக்கையாகும்.

இதே சமயம் வளைகுடாவில் எண்ணெய்க் கப்பல்களைப் பாதுகாக்க அமெரிக்க உதவியை குவைத் நிராகரித்து விட்டதாகவும் தெஹ்ரான் வானொலி அறிவித்தது. (ஓ)

## எகிப்தில் ஆளும் கட்சி அமோக வெற்றி

கெய்ரோ, ஏப்ரல் 8

எகிப்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் ஆளும் ஜனநாயகக் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

ஜனாதிபதி முபாரக்கின் ஜனநாயகக் கட்சி இதன் மூலம் நாடாளுமன்றத்தில் 75 வீதம் வாக்குகளை பெற்றுள்ளது. சோஷலிச தொழிலாளர் கட்சியும் அதன் தேர்தல் கூட்டுக் கட்சியான முஸ்லிம் சகோதரத்துவக் கட்சிக்கும் 15 வீத வாக்குகள் கிடைத்துள்ளன. (ஓ)

## கடல்வளங்கள் பற்றிய மாநாட்டில் முரண்பாடு

கிங்ஸ்டன், ஏப். 8

சர்வதேச கடற்படுகை வளங்களை பயன்படுத்துவதில் நடைமுறைகளை தயாரிக்கும் முயற்சிகள் முரண்பட்ட கருத்து வேறுபாடுகளில் தாமதமடைந்துள்ளன.

ஐ. நா. சபையின் ஆதரவில் ஜமேக்காவில் இதுபற்றிய மாநாடு நேற்று ஆரம்பமாகியது.

சர்வதேச கடல் சட்ட ஒப்பந்தத்தை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளச் செய்வது இந்தக் கூட்டத்தின் முக்கிய பணியாகும்.

சர்ச்சைக்குரிய இந்த ஒப்பந்தத்தில் 159 அரசாங்கங்களும் சர்வதேச ஸ்தாபனங்களும் கைச்சாத்திட்டுள்ளன.

கடல் வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகவுள்ள வழிகளில் சில மாற்றங்களைச் செய்யுமாறு பல நாடுகள் வற்புறுத்தி வருகின்றன. (ஓ)

## சிரியா பாதுகாக்கும்

பெய்ரூட், ஏப்.8

லெபனானில் பாலஸ்தீனிய அகதிமுகாம்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் சிரியத் துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் ஷியா அமல் மக்கள் படையினரின் ஐந்து மாத கால முற்றுகை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

ஷியா அமல் மக்கள் படையால் முற்றுகையிடப்பட்டிருந்த ஒரு முகாமில் மட்டும் சுமார் மூவாயிரம் பேர் அடைபட்டிருந்தனர். (ஓ)

## கொலைக் களத்தால் தப்பியவர்கள் கோரிக்கை

நாம்பென், ஏப். 8

கம்பூச்சியாவில் முன்னர் இன ஒழிப்புக்குக் காரணமாக இருந்தவர்களை தண்டித்து நீதி வழங்கவேண்டும்.

இவ்வாறு கம்பூச்சியா கொலைக்களத்திலிருந்து உயிர் தப்பிய சுமார் 200 பேர் உலக நாடுகளின் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

'கேமரூஜ்' படையினர் மேற் கொண்ட இனப் படுகொலை உலக நீதிமன்றம் கண்டித்து அதற்குப் பொறுப்பாக இருந்தவர்களை விசாரித்து தண்டனை வழங்க வேண்டும் எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## காஸ்ரோவின் குற்றச்சாட்டு

ஹவானா, ஏப் 8

வளர்ச்சியடைந்த நாடுகள் வளரும் நாடுகளைப் பாதிக்கும் வகையில் செயற்படுகின்றன.

இவ்வாறு கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ரோ குற்றம் சாட்டினார். (ஓ)

## அமெரிக்க அணுக் கப்பல் பாகிஸ்தானில்

இஸ்லாமாபாத், ஏப்ரல் 8

வளைகுடாவில் அமெரிக்க கடற்படையின் பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமெரிக்க கடற்படையின் அணுசக்தியில் இயங்கும் விமானம் தாங்கிக் கப்பலான "ஹெட்டி ஹோக்" உட்பட மூன்று கப்பல்கள் கராச்சியை அடையவுள்ளன.

சுமார் ஒருவார காலம் இக் கப்பல்கள் அங்கு நிற்கும். (ஓ)

## 'அரபு லீக்' தீர்மானம்

ருனிஸ், ஏப்ரல் 8

ருனிசியாவில் இருந்து ஆரம்பமாகும் அரபு லீக் நாடுகளின் அமைச்சர்கள் மாநாட்டில் பயங்கரவாதம் தொடர்பாக சர்வதேச மாநாடு ஒன்றை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ)

## பெனஸிரின் அபிப்பிராயம்

இஸ்லாமபாத், ஏப். 9

பாகிஸ்தான் 'காமன் வெல்த்' அமைப்பில் சேர்வது பற்றி முடிவு செய்ய தற்போதைய அரசிற்கு மக்களின் அங்கீகாரம் இல்லை.

இவ்வாறு பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி செல்வி பெனஸிர் பூட்டோ தெரிவித்தார்.

பிரதிநிதித்துவம் இல்லாத ஒரு அரசை ஏற்றுக் கொள்வது 'காமன் வெல்த்' அமைப்பிற்கு நம்பிக்கையாகாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஓ)

### பஜன்லால் கொலை முயற்சி:

## நால்வர் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்

புதுடில்லி, ஏப்ரல் 8

ஹரியானா முன்னாள் முதலமைச்சர் பஜன்லாலைக் கொலை மேற் கொள்ளப்பட்ட முயற்சி தொடர்பாக அமெரிக்காவில் நியூ ஜேர்ஸி மாநிலத்தைச் சேர்ந்த நான்கு சீக்கியர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

பஜன்லால் அமெரிக்கா சென்றிருந்த சமயம் இந்தக் கொலை முயற்சி இடம்பெற்றது.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். (ஓ)

## அருளொளி வீசிய சற்குரு யோகர்

சற்குரு யோகர் சுவாமிகள் இறைபதம் சார்ந்த 23 ஆவது குருபூசை தினம் இன்று.

யாழ்ப்பாணத்தில் ஒரு ஞான பரம்பரை பலகாலமாக இருந்து வந்ததை நாம் சரித்திரவாயிலாகக் காணக் கூடியதாக இருக்கிறது.

— யோக சுவாமிகள் இப்பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

சுவாமிகள் 1872 ஆம் ஆண்டில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையிலுள்ள ஒரு ஊரில் அவதரித்தார்கள்.

தன்னை என்ற பாகுபாடற்று அருள் புரிந்தார்கள்.

எண்ணற்ற அற்புதங்களை பிரபஞ்ச மனித வாழ்வுக்காகச் செய்தருளினார்கள்.

ஆயிரக் கணக்கானோர் அடியவர்களானார்கள்.

இக் கட்டத்தினரில் ஒருவர் இலங்கையின் தேசாதிபதியாகக்கடமையாற்றிய சோல்பெரிப் பிரபுவின் மகனார். இன்னுமோர் ஆங்கிலேயர் அமெரிக்காவைச் சேர்ந்த சுப்பிரமுனி சுவாமிகளாவர். இச் சுவாமிகள் ஹவாய் நாட்டில் பெருந்தாபனத்தில் சைவப் பணியாற்றி வருகின்றார்கள்.

### டாக்டர் நா. கனகரத்தினம்

சிறுவயதில் தாய் தந்தையர் இறந்தபின் கொழும்புத்துறையிலுள்ள சிறிய தகப்பனுடனும் தந்தை வழி மாமியாருடனும் வாழ்ந்து கல்வியும் கற்றார்கள்.

வயது வந்ததும் அரச சேவையிற் சேர்ந்து சில காலம் சேவையாற்றினார்கள்.

பூர்வ புண்ணிய வசத்தால் ஆத்ம ஈடேற்றம் கைவர நல்லூர் சுந்த சுவாமி தேரடியில் குருவாகிய செல்லப்பா சுவாமியின் தீட்சை பெற்று ஞானியானார்.

புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்து முடிந்த பின் கொழும்புத்துறையில் ஆச்சிரமம் கொண்டார்கள்.

இதற்குப் பின் அரை நூற்றாண்டிற்கு மேலாக அருளொளி வீசி யாழ்ப்பாணத்தில் சூரியப் பிரகாசமாய் நல்லன போக்கி வந்தார்கள்.

முக்கால முமறிந்த யோக சுவாமிகளவர்கள் பல அடியார்களின் ஐயப்பாடுகளை அகற்றி அவர்கள் நற்கதியடையுமாறு ஆக்கி வைத்தார்கள். பங்குனி மாதம் இரண்டாம் திகதி ஆயிலிய நட்சத்திரத்தில் (23-3-64) எமது குருநாதனின் வாழ்வு இறைவனுடன் கலந்தது.

### சிருடை

வட்டுக்கோட்டை, ஏப் 9

யாழ் மாவட்ட சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு 1987 ஆம் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக அதிகாரிகள் இதனை விநியோகித்து வருகின்றனர். (இ-161)

**சமய சந்நிதிகளில்**

### திருநாவுக்கரசர் குருபூசை

சாவகச்சேரி(?), ஏப். 9

சுருவில் ஐயனார் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி திருநாவுக்கரசர் குருபூசை இடம்பெறவுள்ளது.

சுருவில் திருமறைக் கழகத்தின் ஆதரவில் நடைபெறவுள்ள இக் குருபூசையில் விசேஷ சொற்பொழிவுகளும், பூசை ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.

திருமறைக்கழக தலைவர் சு. சிவசம்பு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார். (இ-16)

### தையல் கண்காட்சி

மாவிட்டபுரம், ஏப்9

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் முறைசாராக்கல்வி தையல் வகுப்புக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

இவ் வகுப்புகளுக்குப் பொறுப்பான ஆசிரியை செல்வி. யோ. சுப்பிரமணியம் இக் கண்காட்சியை ஒழுங்கு செய்திருந்தார்.

முறைசாராக் கல்வி தொழில்நுட்ப பாடக் கல்வி அலுவலர் திரு ச. சுப்பிரமணியம், யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி செல்வி இ. பெரியதம்பி ஆகியோர் இக் கண்காட்சியை பார்வையிட்டனர், இவற்றை உருவாக்கிய மாணவிகளையும், ஆசிரியை செல்வி சுப்பிரமணியத்தையும் பாராட்டினர். (இ-90)



**பொய்யாமொழி**

குறள்:

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

பொருள்:

அறிவுடையவர் வேறொன்றும் இல்லாதிருப்பினும்) எல்லாம் உடையவரே ஆவர்; அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

**செய்திக்கொத்து**

### முஸ்லிம்காங்கிரஸ் மத்திய குழு கூட்டம்

அம்பாறை, ஏப்ரல் 9

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழுக்கூட்டம் எதிர்வரும் 14-ஆம் திகதி நடைபெற விருக்கின்றது.

காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் தலைமையில், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அட்டாளைச்சேனையில் இந்தக் கூட்டம் நடைபெறும். (இ-14)

### மாதர் கிராமஅபிவிருத்தி சங்க கூட்டம்

மண்டைதீவு, ஏப்ரல் 9

மண்டைதீவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் செல்வி ஞானமணி நடராசா தலைமையில் நடைபெற்றது.

வரவு செலவு பொருள் உற்பத்தியாளர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

### படகுச் சேவை கட்டணம்குறைப்பு

மண்டைதீவு,ஏப்ரல்9

மண்டைதீவு-குருநகர் படகுச் சேவைக் கட்டணம் தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

பிரயாணிகளின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட படகுச் சேவையாளர் சங்கம் போக்குவரத்து கட்டணமாக 20 ரூபா அறவிடுகிறது.

### இஸ்லாமிய ஆசிரிய சங்க மாநாடு

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மாநாடு எதிர்வரும் 16-ம் திகதி அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது. (இ-14)

### மாணவனுக்குப் பாராட்டு

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் அதி விசேஷசித்திகளைப்பெற்ற கன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மாணவன் புவனேந்திரநாதன் - ஆதவன் என்பவரை பாராட்டியுள்ளது கிராம அபிவிருத்திச் சபை.

செல்வன் ஆதவனின் திறமையை பாராட்டி கௌரவிக்கும் வகையில் ஸ்கந்தவரோதயா கல்லூரி அபிவிருத்திச் சபையினர் ஆயிரம் ரூபாவை வெகுமதியாக வழங்கினர். (இ-90)

### உடுவில் மகளிர் மாணவி சாதனை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சையில் உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கல்யாணி குலேந்திரன் ஏழு பாடங்களில் அதி விசேஷ சித்தியும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும் பெற்றார்.

மேலும் நான்கு மாணவர்கள் ஆறு பாடங்களில் அதி விசேஷ சித்தியும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றுள்ளனர். (இ-10)

### பரீட்சை ஏப். 18-ல்

மண்டைதீவு,ஏப்ரல் 9

வட இலங்கை சங்கீத சபையின் வருடாந்த பரீட்சை இம்மாதம் 18-ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இம்முறை தீவுப்பகுதி மாணவர்களின் வசதியை முன்னிட்டு வேலணை சரஸ்வதி வித்தியாசாலையிலும் பரீட்சை நடைபெறவிருக்கின்றது.

## மாணவர் மத்தியில் பண்ணிசைத் திறனை வளர்க்கவேண்டும்

முள்ளியவளை, ஏப்ரல் 9

மாவட்ட பாடசாலைகளுக்கிடையே பண்ணிசைப்போட்டியை நடத்தி மாணவர்களிடம் பண்ணிசைத் திறனை வளர்க்க வேண்டும். பண்ணிசைப் போட்டியில் பங்குபற்ற வாய்ப்பில்லாதவர்களுக்கு சமய சம்பந்தமான பேச்சு, சமய அறி

(4 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Bitsmans Institutes**
MANIPAY.
A/L 88
✶ வெப்ப இரசாயனம் ✶
திரு. மகாதேவா B. Sc.
ஆரம்பம்: 11-04-87 சனி 12-30 p m
விண்ணப்பங்களை முன்கூட்டியே
பதிவு செய்யவும்

# உதயன்

09. 04. 1987 வியாழக்கிழமை

**Bitsmans Institutes**
MANIPAY.
A/L 89 பிரிவு 2
பௌதிகம்
திரு. சௌந்தி B. Sc. (Hons)
ஆரம்பம்: 11-04-87
சனி 7-45 a m
நேர அட்டவணை Sat., Sun. 7-45 a. m.
விண்ணப்பங்களை முன்கூட்டியே
பதிவு செய்யவும்

# யுத்த நிறுத்தத்திற்கு இலங்கை விருப்பம்

கொழும்பு, ஏப்ரல் 9
இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்துவதற்கு வசதியாக யுத்த நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடிக்க இலங்கை அரசு விருப்பம் தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் செய்திக்கு இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின மூலம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா அனுப்பிய பதிலில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

யுத்தநிறுத்தம் இரு தரப்பினராலும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜே. ஆர் ஜெயவர்த்தனா விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இணக்கம் காணப்பட்டால், உடனடியாக வடக்கு மீதான பொருளாதாரத் தடை நீக்கப்படும் எனவும் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனா தமது பதிலில் தெரிவித்திருக்கிறார் என்றும் அறியவருகிறது. (உ)

## பூநகரிக் காட்டில் சைக்கிள், எரிபொருள் தீயிடப்பட்டன

### சிப்பாய்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9
எரிபொருள் கொண்டு வந்தவர்களது சைக்கிள்கள் சிப்பாய்களினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது!

செவ்வாய்க்கிழமை பகல் வவுனியாவில் இருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சைக்கிள்களில் வடக்கே எரிபொருள் கொண்டுவந்தனர்.

பூநகரிக் காட்டுப் பகுதியில் படுத்திருந்த சிப்பாய்கள் இவர்களை வளைத்துப் பிடித்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி எரிபொருள் வாங்கச் சென்றோரும் சிப்பாய்களிடம் சிக்கினர். எரிபொருள் கொண்டுவந்த ஒருவரையும் எரிபொருள் வாங்கப் போன இன்னொருவரையும் பிடித்து இருவரையும் மாறி மாறி அடிபடுமாறு சிப்பாய்கள் உத்தரவிட்டனராம்.

அடிபட மறுத்தவர்களை சிப்பாய்கள் தாக்கினர்.

எனினும் எரிபொருள், சைக்கிள் என்பவற்றை பறிமுதல் செய்த சிப்பாய்கள் அவற்றைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

தம்மால் வளைத்துப் பிடித்தோரை நடந்து செல்லுமாறு உத்தரவிட்டனர். (இ-10)

## காங்கேசனில் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 9
காங்கேசன்துறையில் உள்ள உணவுத் திணைக்களத்துக்குச் சொந்தமான களஞ்சியத்தின் காரியாலய அறைகள் இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் செவ்வாய் காலை நடைபெற்றது.

## மாதகல் பகுதியில் ஹெலித் தாக்குதல்

### மாணவன் பலி; விவசாயி படுகாயம்

பண்டத்தரிப்பு, ஏப். 9
கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் மாதகலில் ஹெலிக்கொப்டரில் இருந்து நடத்தப்பட்டு 50 கலிபர், ஷெல் தாக்குதல்களினால் மாணவன் ஒருவன் பலியானான். வயோதிப விவசாயி ஒருவர் தமது கையை இழந்தார். பலர் காயமடைந்தனர்.

பாதகல் நுணசை முருகன் ஆலயக் கட்டடமும் சில வீடுகளும் ஹெலித் தாக்குதலினால் சேதமுற்றன.

அப் பகுதியில் வெங்காயம் கொள்வனவு செய்ய வந்த லொறியையும் ஹெலிக்கொப்டர் கலைத்துச் சுட்டது.

வீரவாகு சிவகுருநாதன் என்ற 17 வயது மாணவனே உயிரிழந்தவனாவான். (உ-120)

## 91 சடலங்கள் மீட்பு

லண்டன், ஏப்ரல் 8
பெல்ஜியத்தின் துறைமுக நகரில் கடந்த மார்ச் 6 ஆம் திகதி கடலினுள் மூழ்கிய பிரிட்டிஷ் கப்பலை மீண்டும் மிதக்க வைக்கும் முயற்சிகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கப்பல் மூழ்கியபோது அதில் இருந்த நூற்றுக்கும் அதிகமானோர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். அவர்களில் 91 பேரின் சடலங்கள் கடந்த 2 நாள் மீட்புப் பணியின் போது கப்பலில் இருந்து வெளியே எடுக்கப்பட்டனர். (உ)

## ராஜேஷ்கன்னாவும் காங்கிரஸில்

புதுடில்லி, ஏப் 8
பிரபல இந்தி நடிகர் ராஜேஷ் கன்னா இந்திரா காங்கிரஸில் சேர்ந்து விட்டார்.

புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியை ராஜேஷ்கன்னா சந்தித்த பின்னர் அவர் காங்கிரஸில் சேர்ந்தார்.

அரசியலில் நுழைந்ததற்காக நான் சினிமாவை விட்டுப் போகிறேன் என்பது அர்த்தம் அல்ல - இப்படி ராஜேஷ் கன்னா பின்னர் செய்தியாளரிடம் சொன்னார். (உ-ஏ)

## ஆரம்ப பாடசாலை ஆசிரியர் போட்டிப் பரீட்சை

# விண்ணப்ப திகதி நீடிப்பு

பலாலி, ஏப். 9
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள ஆரம்ப பாடசாலைகளின் ஆசிரியர் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான திகதி இம்மாதம் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்களுக்கும் - திருமலை மாவட்ட திருத்திய வெற்றிடங்களுக்கும் - விண்ணப்பிப்பதற்கான கடைசித் திகதி முன்னர் ஏப்ரல் 6 என்று வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

மாவட்டங்களில் வெற்றிடங்கள் உள்ள விபரம் மார்ச் 20 ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மேற்கூறப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்கள் பற்றிய விபரங்கள் அப்போது வெளியிடப்படவில்லை.

தற்போதுதான் அவை வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளிவந்த உதயனில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் வெற்றிடங்கள் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகள் விபரம் வெளிவந்திருந்தது.

இதே கிளிநொச்சியில் வெற்றிடம் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளின் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

உருத்திரபுரம், பரந்தன், வன்னேரிக்குளம், அக்கராயன்குளம், இராமநாதபுரம், வட்டக்கச்சி, பல்லவராயன் கட்டு, இரணியத்திவு, பொன்னாவெளி, புளியம் பொக்கணை, தட்டுவன் கொட்டி, செட்டியார் குறிச்சி, கொல்லகுறிச்சி, மட்டுவில் நாடு, பூநகரி, நல்லூர், கௌதாரி முனை, சோரன்பற்று முகாவில், கோவில் வயல். (இ-119)

## இயக்க..:

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
றேன் கூட்டணி இணையும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

பெரியதோ, சிறியதோ எப்படியாயினும் எல்லா அமைப்புகளும் ஒன்றாக வேண்டியது முக்கியம்.

ஏனைய போராளிகள் அமைப்புகள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக செயற்படுவதற்காக ஒன்றுபடக்கூடாது.

- இப்படி திரு அமிர்தலிங்கம் ஏ. எவ் பி செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்ததாக கொழும்பு 'டெயிலி நியூஸ்' பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டது. (உ-ஏ)

## இந்தியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இலங்கையில்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ரின் கண்டுபிடித்து வைத்திய பரிசோதனைக்குள்ளாக்கியுள்ளனர். மூன்றும் நபர் தேடப்பட்டு வருகிறார்.

'எய்ட்ஸ்' தாய் பிடித்துள்ள இளைஞர் லண்டனில் தங்கி இருந்த சமயம் வெளிநாட்டுப் பிரசை ஒருவருடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்று தெரியவருகின்றது.

இதனிடையில், 'எய்ட்ஸ்' நோயாளர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதனால் ஏற்பட்டுள்ள புதிய பயமுறுத்தலை எப்படிச் சமாளிப்பது என்பது சம்பந்தமாக சுகாதார அமைச்சு அதிகாரிகள் நேற்று அவசரமாகக்கூடி ஆராய்ந்தனர். (உ-ஏ)

## இளநீர் . . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
பிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது தோட்டம் ஒன்றினுள் இளநீர் பறித்துக் கொண்டிருந்த மேற்படி இளைஞனையும் இவரது சகோதரனையும் அழைத்த படையினர் தமக்கும் இளநீர் பறித்துத் தருமாறு கேட்டு வாங்கிக் குடித்தனர்.

இதனையடுத்து காலஞ்சென்ற இளைஞர் சகல படையினருக்கும் இளநீர் பறித்துக் கொடுத்தார் எனக் கூறப்படுகிறது.

## தென்னிலங்கை குழு மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஏப் 9
தென் இலங்கை பௌத்த குருமார்களை உள்ளடக்கிய சமாதான குழு ஒன்று இம் மாதம் மட்டக்களப்புக்கு வருகை தருகிறது.

மாத்தறையிலிருந்து வருகை தரும் இக்குழுவுக்கு வண டட்லி அதிதனுக்கா தலைமை வகிக்கிறார்.

இம் மாதம் 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் இக் குழுவினர் தங்கியிருப்பர். (இ-21)

## ஹெலியை- - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
காகி போராளிகள் மூவரும் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றவர் உயிர் தப்பிக்கொண்டார். மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

இந்தச் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிவா (வவுனியா), செனித் (நயினாதீவு), கருணி (மானிப்பாய்) ஆகி

## மட்டக்களப்பில் 19 படை முகாம்கள்

மட்டக்களப்பு, ஏப்ரல் 9
மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக தற்போது 6 இராணுவ முகாம்களும் 13 விசேஷ அதிரடிப்படை முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ் வருடத்தில் மட்டும் மகிழடித்தீவு, மணற்பிட்டி, அம்பலத்தடி ஆகிய இடங்களில் அதிரடிப்படை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் உன்னிச்சை, மண்டூர், ஆயித்தியமலை, தாளங்குடா ஆகிய இடங்களில் முகாம்கள் அமைக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

தற்போது மட்டக்களப்பில் இராணுவ முகாம்கள் உள்ள இடங்கள் வருமாறு:-

புணானை, வாகரை, வாகனேரி, கதிரவெளி, புல்லுமலை, மாங்கேணி.

விசேஷ அதிரடிப்படை முகாம்கள் உள்ள இடங்கள் வருமாறு:-

களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை, கிரான், சந்திவெளி, ஏறாவூர், சரடியனாறு, வவுணதீவு, கொக்கட்டிச்சோலை?, மகிழடித்தீவு, அம்பலத்தடி, மணற்பிட்டி, வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி. (இ-21)

## புத்தாண்டு உடுதுணி வாங்குவதில் சிப்பாய்கள் தீவிரம்

மட்டக்களப்பு, ஏப். 9
மட்டக்களப்பு நகரில் புத்தாண்டு உடுதுணிகள் வாங்கும் சிப்பாய்கள் தமது தாய் சகோதரிகளுக்கு வாங்கும்போது பெண்களின் உதவியை நாடுகிறார்கள்.

இதனை மட்டக்களப்பு நகரிலுள்ள துணி விற்பனைக் கடைகளில் அவதானிக்கலாம்.

பொது மக்களைப்போல சிப்பாய்களும் புத்தாண்டு உடுதுணிகள் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளார்கள்.

தமது பெற்றோர், உடன் பிறப்புகள், உறவினர்களுக்கும் கொள்வனவு செய்கிறார்கள்.

சாறி, கவுண், சட்டை, ஸ்கேட் போன்ற பெண்களுக்குரிய உடுதுணிகளை வாங்கும்போது அருகில் எவராவது பெண்கள் காணப்பட்டால் "தமது தெரிவு நல்லதா? நீங்கள் தெரிவு செய்து தாருங்கள்" என உதவி கேட்கிறார்களாம். (இ-21)

## ரயில் வே---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அமைக்கப்பட்டுள்ளது.

புதிய பாதுகாப்புப் பிரிவில் 700 பேர் சேர்க்கப்படவுள்ளனர்.

இராணுவப் பயிற்சி பெற மறுத்த பிரிவில் 592 பேர் இருந்தனர்.

இவர்களை இராணுவப் பயிற்சிபெற வேண்டும் என்று ரயில்வே பொது முகாமையாளர் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவு அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் என்று பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். அதை ஏற்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதைத் தொடர்ந்து எழுந்த புதிய சூழ்நிலை பற்றி விசாரிக்க பிரிகேடியர் டென்னிஸ் ஹப்புகல தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

தற்சமயம் இயங்கும் பாதுகாப்புப் பிரிவைக் கலைத்துவிட்டு, இராணுவப்பயிற்சிபெறும் திறமையை ஏற்கும் புதிய பாதுகாப்புப் பிரிவை உருவாக்கும்படி அக்குழு சிபார்சு செய்தது (உ-ஏ)

## ஆசிரியர்பதவி: கிழக்கிலுள்ள வெற்றிடங்கள்

மட்டக்களப்பு, ஏப். 9
கிழக்கு மாகாணத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கு 199 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சிங்கள ஆசிரியர்களுக்கு 66 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் வெற்றிடங்கள் இருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த ஏனைய இரு மாவட்டங்களில்தான் சிங்கள ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர்களாகிய திரு. S. ஜெயச்சந்திரன், (புன்னாலைக்கட்டுவன்) N. நவரெட்ணராசா (பருத்தித்துறை) ஆகிய இருவரும் சித்திரை மாதம் 9ஆம் திகதி 1984ஆம் ஆண்டு கோரமான செயலினால் ஸ்தாபனத்திற்குள் இரையானார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— யாழ் ஐ. வி: சங்க ஊழியர்கள்

## நீத்தார் பட்டியல்

### திருமதி திலகவதி சுப்பிரமணியம்

புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த திருமதி திலகவதி சுப்பிரமணியம் காலமானார். இவர் காலஞ்சென்ற பொலிஸ் பரிசோதகர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், யோகநாதன் முகாமையாளர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வவுனியா, கயிலாயநாதன் ஆசிரியர், சரஸ்வதி வித்தியாலயம் வேலணை, நித்தியானந்தன் சில்வா அன் கோ வவுனியா, சரோஜினிதேவி, ஸ்ரீகாந்தன் இ போ. ச மன்னார் சத்தியபாமா ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகதேவி, இராஜலெட்சுமி, லூர்தம்மா, நாகமுத்து ஒய்வு பெற்ற ஆசிரியர், வைத்தீஸ்வர வித்தியாலயம், மெடோனா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (9-4-87 வியாழன்) 2 மணியளவில் நடைபெறும்.

— தகவல்: கயிலாயநாதன்

## விசாரம்

வாரும் முரளியார்! என்ன நீரும் வீட்டிலை பதுங்கு குழி வெட்டுகிறீரோ? வேலை எல்லாம் முடிஞ்சிட்டுதோ?

இப்ப ரவுன் எண்டும் இக்கரை கிராமப்புறம் எண்டும் இல்லை ஒரே பதுங்கு குழி வெட்டுற வேலை தான். கண்டியிலையும், லண்டன் மாஸ்டர்களிலும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலும், பஸ் ஸ்ராண்டிலும் பதுங்கு குழி வெட்டுறது எண்டு எக்கச்சக்கமாய் போகுது. லொறி லொறியாய் மணல் இழுத்து இறக்குகினம்.

போன வருஷங்களிலை கவை இராணுவத்தினர் அடிச்ச ஷெல்லுகள் 'பிளாட்டு'க்கு மேலை விழுந்தால் ஒண்டும் செய்யாது எண்ட துணிவில சனம் பிளாட்டுகளை நாடிச்சது. இப்ப அடிக்கிற ஷெல்லுக்கு பிளாட் என்ன இரும்பாலை கூரை போட்டாலும் தாங்காது. ஷெல் அந்த மட்டு எண்டபடி பொம்மர் போடுற குண்டைப் பற்றிக் கேட்கவே வேணும்.

ஷெல்லும், குண்டும் போடுறுகள் எண்டு பேசிட்டு எத்தினை சனமெண்டு எத்தினை நாளைக்கு எண்டு வீட்டை விட்டுப் போறது? அதாலை இப்ப சனம் எல்லாம் பதுங்கு குழி வெட்டுறது எண்டு முடிவுகட்டி விட்டுதுகள்.

பதுங்கு குழி வெட்டாவிட்டால் 500 ரூபா தண்டம் கட்ட வேண்டி வரும் எண்டும் ஒரு கதை உலாவுது. அது எப்பிடியோ, ஒவ்வொரு வீட்டுக்காரரும் தங்கடை நன்மை கருதி பதுங்கு குழி வெட்டுறது நல்லது.

உதுக்குள்ளை சில பேர் அரசாங்கம் இராணுவ நடவடிக்கையைக் கொஞ்ச நாளைக்கு நிறுத்தப் போகுது எண்டும் தாக்குதல்கள் நடக்காது எண்டும் கதையைக் கட்டி விட்டிருக்கினம்.

அவர்தான் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனான தொண்டமான் புது வருஷத்தோடை பத்து நாளைக்கு ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தம் செய்யவேணும் எண்டு அரசாங்கத்துக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறார். அதுக்கு இன்னும் நிச்சய மான மறுமொழியை அரசாங்கத்திடம் இருந்து காணயில்லை வீரப் பிரதாபனான அச்சாணியார் உதுக்கு உடன்படுவாரோ, போராளியள்தான் முன்னுக்கு ஆயுதங்களைக் கீழே வைக்க வேணும் எண்டு முரண்டு பிடிக்கிற அத்தமர் உதுக்கு உடன்படுவாரோ என்னுடைது இன்னும் சரியாத் தெரியவில்லை.

அப்பிடித்தான் அவை தாக்குதல்களை நிறுத்திறதாக ஒப்புக்கொண்டாலும் முந்தின யுத்த நிறுத்த அனுபவம் எங்களுக்கு இருக்கத்தானே வேணும்!

போராளிகள் தாக்கினம் எண்டு சொல்லிக்கொண்டு, தற்பாதுகாப்புத் தாக்குதல் நடத்துறோம் எண்டு சொல்லிக்கொண்டு, அவை இராணுவத்தினர் விளையாட்டுக் காட்டுகினம் என்டது மட்டும் நிச்சயம்!

ஒரு விஷயம். கொழும்பிலை அரசாங்க வட்டாரங்களோடை கொஞ்சம் நெருங்கிய பேர்வழி ஒருத்தரை இரண்டு நாளைக்கு முன்னர் சந்திக்க முடிஞ்சுது.

என்ன உவை தமிழரை அழிக்கிற காரியத்தை இப்போதைக்கு நிப்பாட்டமாட்டினமோ எண்டு அவரிட்டை கேட்டேன்.

தங்கடை பதவிக் காலம் முடியும்வரை இந்தப் பிரச்சினையை ஒரு மாதிரி இழுத்தடிக்கிறது தான் அரசாங்கத்தின் இருக்கிற முக்கிய மனுஷர்களின் எண்ணக்கிடக்கை எண்டு அவர் சொன்னார். ஒண்டு இரண்டு பேர் பிரச்சினைக்கு ஏதாவது ஒரு தீர்வைக் காண வேணும் எண்டு விரும்பினாலும் அவையின்ரை சொல்லு ஏறுற அளவுக்கு இல்லை எண்டு சொன்னார்.

இப்ப இரண்டொரு நாளா இராணுவத்தினர் கோட்டையிலிருந்து ஷெல் அடிக்கிறதைக் குறைச்சுக் கொண்டு சிறைப்பர் சூட்டிங் நடத்துகினமாம்.

உவையின்ரை யுத்த நிறுத்தமும் உப்பிடித்தான் இருக்கும்.

✶ ✶ ✶

கொண்டோடிக்கு கடித மூலம் வந்த ஒரு புகாரைச் சொல்லுறேன் கேளேன்;

போன மாசம் 30ஆம் திகதி அண்டைக்குத்தான் ஆஸ்பத்திரியிலை ஷெல்லடிக்கு 9 பேர் பலியான சம்பவம் நடந்தது.

பிறகும் ஷெல்லடி நடக்கலாம் எண்ட பயத்திலை மினி பஸ்கள் ஆரியகுளம், மிட்டரஸ் கடைச் சந்தி ஆகிய இடங்களில் இருந்துதான் சேவைகளை நடத்தின.

ஆனால் ஆரியகுளத்தில இருந்து வெளிக்கிட்ட ஒரு மினிபஸ் பணம் கட்டு விதியாலை பஸ் நிலையத்துக்கு வந்து. பிறகு ஆஸ்பத்திரி வீதியாலை கச்சேரிக்கு போச்சுதாம்.

இந்த ஆபத்தான நேரத்திலை இப்படிச் செய்யலாமோ? அப்பிடி எண்டால் ஆஸ்பத்திரிக்கு முன்னாலை இருந்து வெளிக்கிட்டிருந்தால் நாங்கள் ஏறியிருக்க மாட்டோமே எண்டு பிரயாணிகள் சாரதியை ஏசியும் அவர் கேட்கயில்லையாம்.

பிரதான வீதிக்குப் போனதும் ஹெலி வந்திட்டுதோ எண்டு பயப்படுமளவுக்கு மினி பஸ்ஸை வேகமாக ஓடினாராம்.

தமிழன் இந்தப் பாடுபடயிக்கை இப்படியும் மனிதாபிமானம் இல்லாத மனுஷர்களோ எண்டு அந்த வாகனத்திலை பயணம் செய்த மூன்று பெண்மணிகளில் ஒருவர் குறைப்பட்டிருக்கிறார்! எங்களிட்டை மனிதாபிமானம் இருந்தால்தானே நாங்கள் மற்ற இன மக்களிட்டை அதை எதிர்பார்க்கலாம். எங்கடை ஆக்களுக்கு அது எப்ப வருமோ?

— கொண்டோடி

## மாணவர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு இந்து வித்தியாலய மண்டபத்தில் நடந்த முதலாவது சைவநெறிக் கழக அங்குரார்ப்பண கூட்டத்தில் உரையாற்றுகையில் திரு. முருகதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

முல்லைத்தீவு கச்சேரி பிரதேச இந்து கலாசார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திரு. க. சிவலிங்கமும் சமுகமளித்திருந்தார். (இ-93)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 09-04-1987 தொலைபேசி இல. 24805, 22073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office. Under Number

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org